நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 15உ வெள்ளி (28—1—55) ★ ★ வெளியூர்: தை 16உ சனி (29—1—55) [இதழ் 194

தரிசு நிலங்களைப் பயிரிட சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜன. 26—

பயிரிடுவதற்கு லாயக்காகவோ, அல்லது தரிசாகவே உள்ள நிலத்தை சொந்தமாகவோ அல்லது குத்தகை மூலமோ சாகுபடிக்குக் கொண்டுவரும்படி, ஒவ்வொருமாவட்ட நிர்வாக அதிகாரி (கலெக்டர்)யும் தமது அதிகாரத்திற்குட்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கலாம் என்றும், உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அல்லது கலெக்டர் குறிப்பிடும் காலத்திற்குள்ளாக, இந்த நிலங்களைச் சாகுபடி செய்யவேண்டும் என்றும், அந்த நிலங்களில் உணவுப் பொருள்களே சாகுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சர்க்கார் வெளியிட்டுள்ள உத்தரவு ஒன்று கூறுகிறது.

பட்டம் பதவிக்கு புதிய குத்தகை!

பொதுஉடைமை கட்சியின் 'அரசியல் பேரம்'

புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியின் கள்ள உறவு

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை காங்கிரஸ் வலியுறுத்தாதாம்!

பட்டம் தாணு மந்திரி சபை மீது கொண்டு வருவதாக இருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, திரு-கொச்சி த. நா. கா. கட்சித் தலைவர் ஏ. சிதம்பரநாத நாடார் 29-ந் தேதி சனிக்கிழமை கொண்டு வரப்போவதில்லை என நிச்சயமாகத் தெரியவருகிறது.

"எங்களுடைய கோரிக்கையை எங்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டால், நாங்கள் பட்டம் மந்திரி சபைக்கு 'பொதுப்படையானதும் அவசியமானதுமான ஒத்துழைப்பளிப்போம்"

என்று கம்யூனிஸ்டு கட்சி சார்பில் டி. வி. தாமஸ் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது :

'நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது நாங்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறோம் ; எங்களுடைய கோரிக்கைகளை மந்திரி சபை நிறைவேற்ற ஒப்பினால் திருத்தத்தையும் வலியுறுத்த மாட்டோம் ; மூலத்தீர்மானத்தையும் ஆதரிக்கமாட்டோம்.

"தீர்மானத்தின்மீது விவாதத்தைத் தள்ளிவைப்பதை எதிர்க்கிறேன். ஒரு மந்திரி சபையின் தகுதியை, தீர்மானம் கொண்டு வருகிற கட்சியைச் சேர்ந்த சட்டசபையில் இருக்கிற அல்லது இல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டோ, மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிற வாக்குபலத்தைக் கொண்டோ முடிவு கட்டுவது முறையாகாது."

திருவனந்தபுரம், ஜன. 27—

இன்று கூடிய திரு-கொச்சி சட்டசபை, தி-கொ. த. கா. தலைவரான ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களால் பட்டம் மந்திரி சபை மீது கொண்டுவரப்பட இருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மான கோரிக்கைக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. அதன்படி மேற்படி தீர்மானம் 29-ந் தேதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

காங்கிரஸ் கட்சியும், அண்மையில் ம. சோ. கட்சியிலிருந்து விலகிய சட்டசபை உறுப்பினரான டி. எஸ். இராமசாமியும், கே. சட்டநாதக் கரையாளரும், தி கொ. த. கா. கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும்; அனுமதி கோரிக்கையை ஆதரித்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அனுமதி அளிப்பதை இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கம்யூனிஸ்டு கட்சியும், கேரள சோஷலிஸ்டு கட்சியும் எதிர்த்தன. மேற்படி ஐக்கிய முன்னணியிலிருந்து விலகியுள்ள புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியும், எதிர்ப்பு அணியில் சேர்ந்து கொண்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அனுமதி கோரிய சிதம்பரநாதர், மேற்படி தீர்மானத்தை வருகிற பிப்ரவரி மாதம் 5-ந் தேதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்பொழுது தான் சிறைச்சாலையில் உள்ள ஏழு தி. கொ. த. கா. கட்சி உறுப்பினர்களும் விவாதத்தில் பங்குகொள்வதற்கு இயலக்கூடுமென்றும் குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு சட்டசபை

(4-ம் பக்கம் பார்க்க)

நீதிமன்றத்தில் - பூனை பிரச்சினை!

பண்டங்களைத் திருடுகிறதாம்— பாத்திரங்களை உடைக்கிறதாம்!

'அமைதிக்குப் பங்கம்' வராமல் காக்க உத்தரவு!

கல்கத்தா, ஜன. 27—

ஒரு வீட்டில் வளரும் பூனை அடுத்த வீட்டில் சென்று பண்டங்களைத் திருடித் தின்று பாத்திரங்களை உடைத்துவிடுகின்றதினால், பூனை வளர்ப்பவருக்கும், அடுத்த வீட்டுக்காரருக்கும் 'போர்' மூளுமோ என்றஞ்சி நீதிமன்றத்தின் தலையீடு வேண்டியிருந்தது— என்று, செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

தீனபந்து பானர்ஜி என்பவர் பெரிய குடும்பதனக்காரர்—அவர், ஆறு பூனைகளை வேறு வளர்த்து வருகிறார். அவரது பக்கத்து வீட்டுக்காரரான டாக்டர் பானர்ஜி என்பவர், அந்தப் பூனைகள் தம் வீட்டினுள் புகுந்து உணவுப் பண்டங்களைக் கொள்ளையிட்டுச் செல்வதாகவும், கண்ணாடி பாத்திரங்களை உடைத்து நொறுக்கிச் சேதம் விளைவிப்பதாகவும் நீதிமன்றம் ஒன்றில் புகார் செய்தார்.

அடுத்த வீட்டுக்கு தமது பூனைகள் போகாதவாறு தீனபந்து கண்காணிக்க வேண்டும் என்று நீதிபதி எச்சரித்திருப்பதுடன், இந்த பூனை பிரச்சினையால் 'அமைதிக்குப் பங்கம்' எதும் வராமல் கவனிக்குமாறு போலீசாருக்கும் அவர் உத்திரவிட்டுள்ளாராம்.

கம்யூனிஸ்டுகளுக்குப் பட்டத்தின் பரிசு!

வயலார் வழக்கு கைதிகள் விடுதலை

திருவனந்தபுரம், ஜன. 27—

திரு—கொச்சி சர்க்கார், வயலார்—புன்னப்புரா கலவர வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறை தண்டனை அனுபவிக்கும் 35 கைதிகளை விடுதலை செய்துவிட்டது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், சர்க்காருக்கு எதிராக ஆயுதம் தாங்கி கலவரம் புரிந்ததாக இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது

ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டு வெளியே போகுமுன்னர் நடைபெற்ற கலவரம் இது ; தண்டிக்கப்பட்டவர்கள் கம்யூனிஸ்டு அனுதாப தொழிலாளர்கள் என்று தெரிகிறது.

குடியரசு தினத்தையொட்டி இவர்கள் விடுதலை செய்யப்படுவதாகவும், இவர்களை விடுதலை செய்வது பற்றி சர்க்கார் சிலகாலமாகவே ஆலோசித்து வந்தது என்றும் பட்டம் தாணு கூறியிருக்கிறார்.

திரு—கொச்சி மந்திரி சபை இக்கைதிகளை விடுதலை செய்ய தீர்மானித்ததாம். சட்டசபை பிரஜா - சோஷலிஸ்டு கட்சியும் இந்த மு..வுக்கு ஆதரவு அளித்ததாம்.

இக்கைதிகள், திரு — கொச்சி கம்யூனிஸ்டுகளின் கோரிக்கையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஊசலாடிக் கொண்டிருக்கும் பட்டம் தாணுவின் மந்திரி சபை கவிழ்ந்துவிடாமல் பாதுகாக்க கம்யூனிஸ்டுகள் தந்த கோரிக்கைகளில், இக்கைதிகளின் விடுதலைக் கோரிக்கையும் ஒன்றாகும்.

அரசியல் ஊழியர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவது, போலீஸ் அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது, நிலச் சீர்திருத்தம் போன்ற கோரிக்கைகளை பட்டம் மந்திரி சபையிடம் கம்யூனிஸ்டு கட்சி கொடுத்திருக்கிறதாம்.

"நாட்டில் இருள் சூழ்ந்திருக்கிறது— ஒளி தென்படவில்லை"

பட்டப்பகலில் விளக்குகளுடன் மந்திரி முன் ஆர்ப்பாட்டம் நடத்திய கிராமவாசிகள் விளக்கம்

ஆமதாபாத், ஜன. 27—

"மாநிலத்தில் இருள் சூழ்ந்திருக்கிறது—ஒளி தென்படவில்லை ; நாங்கள் கையில் வைத்திருக்கும் ஒளி விளக்குகளை வைத்துக்கொண்டு நீதியைத் தேடிக்கொண்டிருக்கிறோம்,"

என்று, பம்பாய் நிதிமந்திரி டாக்டர் ஜீவராஜ் மேதா முன்பு பட்டப்பகலில் விளக்குகளை வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய கிராமவாசிகள் கூறியிருக்கின்றனர்.

அம்ரெலி மாவட்டத்தில், சாமதியாலா எனும் கிராமத்தைச் சேர்ந்த 100 பேர், கையில் லாந்தர் விளக்குகளுடன் அந்த மந்திரி முன்புகூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'பட்டப்பகலில் விளக்கு ஏன்?' என்று மந்திரி கேட்டபோது, அவர்கள், மேற்கண்டவாறு பதில் கூறியிருக்கிறார்கள்.

அந்த கிராமவாசிகள் 200 பேர் கையொப்பமிட்டு, மனு ஒன்று அனுப்பி 2 மாத காலமாகியும், மாவட்ட அதிகாரியிடமிருந்தோ மாவட்டக் கழகத் தலைவரிடமிருந்தோ தங்களுக்கு ஒரு பதிலும் வராததினாலேயே தாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதாய்த் தெரிவித்தனராம்.

மந்திரி அவர்களது குறைகளைக் கவனிப்பதாக வாக்குறுதியளித்ததின் பேரில் அவர்கள் கலைந்து சென்றனராம்.

இங்கிலாந்து மக்கள் சபை முன்பு ஆர்ப்பாட்டம்

குதிரைப்படையினர் கூட்டத்தைக் கலைத்தனர்

மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியாவதற்கு எதிர்ப்பு

லண்டன், ஜன. 28—

மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியாவதை எதிர்த்து நூற்றுக்கணக்கானவர்கள் 25-ந் தேதியன்று மக்கள் சபை முன்கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

மக்கள் சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே ஆர்ப்பாட்டக்காரர்கள், தங்கள் தங்கள் தொகுதி உறுப்பினர்களைக் காண வேண்டுமெனக் கோரி கூட்டம் போட ஆரம்பித்திருக்கின்றனர்.

கூட்டம் பெரிதாகவே போலீசார், குதிரைப்படையின் உதவியுடன் கூட்டத்தைக் கலைத்திருக்கின்றனர்.

ஏராளமான ஆர்ப்பாட்டக்காரர்கள் போலீஸ். லாரிகளில் ஏற்றப் மக்கள் சபைக் கட்டிடத்தினின்று வெளியே கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக கம்யூனிஸ்டு பத்திரிகையான 'டெய்லி வொர்க்கர்' என்ற பத்திரிகை, பிரிட்டன் எங்குமிருந்தும் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் தங்கள் தொகுதி அங்கத்தினர்களைச் சந்தித்து மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியாவதைத் தடுக்க வேண்டும் என்று வற்புறுத்துமாறு எழுதிக்கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

மக்கள் சபையில் ஒரு தொழிற் கட்சி அங்கத்தினர் எழுந்து, தனது தொகுதியிலிருந்து தன்னை காண வந்திருக்கும் வாக்காளர்களை குதிரைப்படையினர், கட்டிடத்தை விட்டு அப்புறப்படுத்துகின்றனர்— துரத்துகின்றனர்—இது நியாயமற்றது என்று குறைப்பட்டிருக்கிறார்

மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியாவதற்கான பாரிஸ் உடன்படிக்கையை கிருஸ்துமஸ் விடுமுறைக்கு முன்பே மக்கள் சபையும் பிரபுக்கள் சபையும், அங்கீகரித்துவிட்டன.

'யுத்த நிலை' ரத்து

ஜெர்மனியுடன் 1941 முதல் இருந்துவந்த "யுத்த நிலைமை"யை சோவியத் மக்கள் சபை ரத்து செய்துவிட்டது ; ஆனால், ஜெர்மனி பற்றி நான்கு வல்லரசுகளிடையே இருந்து வரும் உடன்பாடு நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஜெர்மனி மண் மீது துருப்புகளை வைத்திருக்க நேச நாடுகளுக்கு இந்த உடன்பாடு அதிகாரமளித்திருக்கிறது.

இராணுவ வாழ்க்கை

குஜராத்தி இளைஞர்களுக்கு முன்னரே பயிற்சியளிக்க கழகம்

இராணுவ வாழ்வினை மேற்கொள்ள விரும்பும் குஜராத்தி இளைஞர்களுக்காக, முன்கூட்டியே இராணுவப் பயிற்சி அளிக்கும் கழகம் ஒன்றைத் துவக்க, அகமதாபாத் இராணுவ, துப்பாக்கி பயிற்சி சங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்திய இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர மனுச் செய்யும் இளைஞர்களுக்கு அந்தக் கழகம் முன்கூட்டியே, பயிற்சி தருமாம். யசோதர் மேத்தா என்ற பிரபல பாரிஸ்டர் அந்தக் கழகத்தின் டைரெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—1—1955 வெள்ளி

அதிகார எக்காளம்!

ஆவடியில் கூடிய காங்கிரசில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களைக் காட்டிலும், நிறைவேற்றப் பெருது, பொருள் ஆய்வுக் குழுவிற்குள் ஆராயப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்ட தீர்மானங்கள், அதிகாரத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்களின் இயல்பை நன்கு விளக்கிக் காட்டுவனவாக உள்ளன. அத்தீர்மானங்களைக் கொண்டு தான், காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களின் உளப்போக்கை நம்மால் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.

குஜராத்தைச் சேர்ந்த திரிகம்லால் ஜம்னுதாஸ் படேல் என்பார், அமைதியையும் ஒழுங்கையும் காப்பாற்றுவது என்ற பெயரினுல் போலீஸ் துறையினரால், பொதுமக்கள் மீது நடத்தப்பெறும் ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகத்தையும் ஆராய்ந்து உண்மையை அறிவிக்க மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர குழுக்களை, ஒவ்வொரு மாநிலங்களிலும் உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். போலீஸ் துறை மேற்கொள்ளும் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஏதாவது உயிருக்குச் சேதம் ஏற்பட்டால் தான், மேற்படி விசாரணைக்கு அவசியமேற்படுகிறது எனவும், மேற்படி தீர்மானத்தில் ஒரு நிபந்தனையும் இருக்கிறது.

அத்தீர்மானத்தைக் கொண்டு வந்த படேல், பொறுப்பற்ற போக்கில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் போலீஸ் துறையினருக்கு இக்குழு நியமனம் ஒரு எச்சரிக்கையாக இருக்குமென குறிப்பிட்டிருந்தார்.

அத்தீர்மானத்தை ஆமோதித்த மத்திய பாரத் காங்கிரஸ்காரரான பரமாநந்த படேல், தீர்மானத்தின் விளைவாக ஆய்வுக் குழு உருவாக்கப்பட்டு விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பதானது, போலீஸ் துறையினரில் சிலர் மிகைபடவும் பொறுப்பற்ற நிலையிலும் செயலாற்றுவதற்கு எதிராக அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட தகுந்த எச்சரிக்கையாகும் என திருப்தி அடைவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தீர்மானம், நெருக்கடியான நிலைமையிலும் போலீஸ் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கூடாது எனக் கூறுவதாக இல்லை; அல்லது, துப்பாக்கியைப் போலீஸ் துறையினர் எப்பொழுதும் அறவே தொடவும் கூடாது எனக் கட்டளையிடுவதாகவும் இருக்கவில்லை. தீர்மானம் கோருவதெல்லாம், ஒருவர் இருவர் இறந்துவிடுகிற அளவிற்கு மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகங்களை விசாரித்து உண்மை கண்டறிய ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்று நீதிபதிகள் அடங்கிய நிலையான குழுவை உருவாக்க வேண்டுமென்பதேயாகும். இதனுல், எந்த வகையிலும் போலீஸ் துறையினரின் கடமையில் தளர்ச்சி ஏற்படுமோ என அஞ்சத் தேவையுமில்லை; பொதுமக்கள் பூரிப்படைந்து விடுவர் என்ற நம்பிக்கை பிறப்பதற்கும் இடமில்லை. ஆனுல், தீர்மானம் வெறும் கண்துடைப்பே என்பதை, தீர்மானத்தைக் கொண்டுவந்தவரும் ஆமோதித்தவருமே, தங்கள் பேச்சின்மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

இந்தக் கண்துடைப்புத் தீர்மானத்தின்படி நடந்து கொள்ள அதிகாரத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் விரும்பாததுடன் மட்டுமன்றி, தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுவதே பெரும் தீமையை உண்டாக்கும் என்று பேசியும் இருக்கிறுர்கள்; அவர்கள் பேச்சில் துளியும் பொருத்தமிருப்பதாகக் காணேம்.

தீர்மானத்தை எதிர்த்த பல்வந்த்ராய் மேத்தா, ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பிறகும் அதிகார பூர்வமான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும், அத்தகைய விசாரணையை மாவட்ட அரசாங்க அதிகாரிகள் நடத்தி, துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணத்தை அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும் எனவும், அவ்வறிக்கையின் கூற்றுப்படி மேற்கொண்டு நீதிபதிகளைக் கொண்டாவது அல்லது வேறு வகையிலாவது விசாரிக்க வேண்டியதற்கு அவசியமிருக்கிறதா என்று தொடர்புடைய அரசாங்கம் முடிவு கட்டும் எனவும், இதற்கான அரசாங்கத்தின் நிரந்தரக் கட்டளை ஒன்று ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகிறது எனவும் காரணம் காட்டி மறுத்திருக்கிறுர். இத்துடன், குறிப்பிட்ட அரசாங்கத்தின் போக்கு பொறுப்பற்றதாக இருக்கிறது என அறியவந்தால், அவ்வரசாங்கத்தை விரட்டுவதற்கான சட்ட சம்பந்தமான உரிமை பொதுமக்களுக்கு இருக்கவே இருக்கிறது எனவும், மேத்தா சட்ட வாதம் பேசியிருக்கிறுர்.

ஆனுல், பிரதமர் நேருவோ, விவாதத்தில் குறுக்கிட்டு, ஏகாதிபத்திய வாதியிலும் கடைந்தெடுத்த ஏகாதிபத்திய வாதியாக அதிகார எக்காளம் போட்டிருக்கிறுர்.

தீர்மானத்தை ஒப்புக்கொண்டு, அதன் நோக்கப்படி அரசாங்கங்கள் நடந்து கொள்ள முன்வந்தால்,

"மேலும், அதிகப்படியாக போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்திற்குத் தேவை ஏற்படுத்துகிற வகையில் குறிப்பிட்ட ரகமான நடவடிக்கைகளை மேலும் மேலும் குறிப்பிட்ட மக்கள் மேற்கொள்ளுவதற்கு ஊக்கமளிப்பதாகும்,"

என, பண்டிதர், விளக்கம் தந்திருக்கிறுர். தீர்மானத்தை ஒப்புக்கொள்வதால் ஏற்படும் விளைவு குறித்து பண்டிதர் அஞ்சுவது உண்மையாக இருக்குமானுல், பல்வந்த்ராய் குறிப்பிட்டது போன்று இருந்துவரும் ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பிறகும் உயர் அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்ற நிரந்தர உத்தரவே, பண்டிதர் குறிப்பிடும் விளைவை உருவாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனுல், நிரந்தர உத்தரவின் உருபலனுக, குறிப்பிட்ட மக்கள் குறிப்பிட்ட நடவடிக்கையை மேலும் மேலும் மேற்கொள்ளுகின்றனர் என்றே, அதன் காரணமாக போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் எண்ணிக்கையில் அதிகமாகியுள்ளன என்றே, இதுவரை கூறினவர் எவரும் இல்லை. அதைக் கூறி, உயர் அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென இருக்கும் நிரந்தர உத்தரவை உடனடியாக ஒழித்துவிட வேண்டுமென இதுவரை, பண்டிதர் உள்ளிட்ட எந்தப் பெருந் தலைவர்களும் உரைத்ததாகத் தெரியவில்லை.

நிரந்தர உத்தரவிற்கும், காங்கிரஸ் பொருள் ஆய்வுக் குழுவில் கொண்டு வரப்பட்ட போலீஸ் துப்பாக்கிப் பிரயோக விசாரணை கோரிக்கைத் தீர்மானத்திற்கும் உள்ள வேற்றுமை ஒன்றே ஒன்றில்தான் உள்ளது. அதாவது உயர் அதிகாரிகளைக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகங்களை விசாரிக்க வேண்டுமென்று இருந்து வரும் நிரந்தர உத்தரவு கூறுகிறது. ஆனுல் தீர்மானமோ, மூன்று நீதிபதிகளைக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகங்களை விசாரணை செய்ய வேண்டுமெனக் கோருகிறது. நிரந்தர உத்தரவில் அரசாங்க அதிகாரிகளுக்கு இடம் கொடுத்திருக்கிறது. தீர்மானமோ, அந்த உயர் அதிகாரிகளுக்கு பதிலாக நீதிபதிகளை சிபாரிசு செய்திருக்கிறது. உயர் அதிகாரிகளை விசாரணைக்கு நியமிக்க ஒப்புக்கொண்டுள்ள அதிகாரத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள், அவர்களுக்கு பதிலாக நீதிபதிகளை ஒப்புக்கொள்ள ஏன் அஞ்சவேண்டும்? இதற்குக் கிடைக்கும் விடையில்தான், பண்டிதருக்குள்ள அச்சத்தின் இரகசியம அடங்கி இருக்கிறது.

தன்னைப் போன்ற காங்கிரஸ் தலைவர்கள், மனிதாபிமானம் கொண்டவர்கள், நாட்டு மக்கள் நலத்தில் அக்கறை கொண்டவர்கள், தவறு செய்யாத புனிதவான்கள், வாக்குத் தவருத வள்ளல்கள் என்றெல்லாம், பாராட்டிக் கொண்டாடும் உரிமை பண்டித நேருவிற்கும் உண்டு. அந்த உரிமையை நாமும் ஒப்புகிறேம். ஆனுல், அவரைப் போன்றே, அவரையும் அவரைச் சார்ந்துள்ள மற்ற காங்கிரஸ் ஆளவந்தார்களையும் அதிகாரத்திலிருந்துகொண்டு தவறு செய்யாதவர்களென, குடிமக்கள் அனைவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் என எதிர்பார்ப்பது, அதிகாரத்தின் பழுதுபட்ட பார்வையேயாகும்.

அதிகாரபீடத்திலிருந்துகொண்டு தாங்கள் செய்கின்ற காரியம் அனைத்தும் நியாயத்திற்குட்பட்டதே என்ற நம்பிக்கை பண்டித நேருவுக்கு உண்மையில் இருக்குமானுல், அவருடைய ஆட்சியில் நீதிமன்றங்களுக்கே ஏற்பாடு இல்லாமல் இருந்திருக்க வேண்டும். ஆளவந்தார்களைக் காட்டிலும் தனி நபர்களின் உரிமைகள் அனைத்தையும் பாதுகாத்து நிற்பது, நவீன உலகில் நீதிமன்றங்களேயாகும். பண்டிதர் போன்ற அதிகார வர்க்கத்தினருக்கும், குடிமக்களுக்கும் இடையில் நடுவராக இருந்து, இருசாராரின் அளவுகடத்தலையும் இடித்துக் காட்டி, நியாயத்தை நிலைநாட்டும் பொறுப்பும், கடமையும் கொண்டிருப்பது நீதிமன்றங்களே. பலவகையிலும், அதிகார வர்க்கத்தை மக்கள் நம்புவதைக் காட்டிலும், நீதிமன்றங்களைத்தான் மக்கள் நம்புவர்; நம்பியும் இருக்கின்றனர்.

அதிகாரத்திலுள்ளவர்கள், தங்கள் அளவுகடத்தலை அநியாக எதிர்க்கின்ற மக்கள் மீது எவ்வளவு ஆத்திரம் கொள்ளுகின்றனரோ, அதைக் காட்டிலும் கூடுதலான அளவு நீதிமன்றங்களின் இடித்துரையில் அவர்கள் ஆத்திரம கொள்வது, நாளாக நாளாகப் பெருகி வருகிறது.

நீதிமன்றங்களின் அதிகார வரம்பை—உரிமையைப் பறிப்பதில், பண்டிதர் உள்ளிட்ட காங்கிரஸ் அதிகாரவர்க்கத்தினர் எடுத்துக் கொண்டுவரும் நடவடிக்கையை நாடு அறிந்தே இருக்கிறது. நீதிமன்றங்களுக்கு, மக்கள் விளக்கமாகத் தெரிந்துகொள்ளா வண்ணம் மாட்டும் இரும்பு விலங்கேயாகும் இது. எனவே, நீதிபதிகளின் நடுநிலை கண்டு பண்டிதருக்கு ஏற்பட்டுள்ள அச்சமே, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்களை விசாரிக்க நீதிபதிகளைக் கொண்ட நிரந்தரக் குழுக்களை நியமிக்க வேண்டுமென்ற காங்கிரஸ் தனி நபர் தீர்மானத்தை எதிர்க்கும்படியாக, அவருக்குத் தூண்டுதல் தந்திருக்கிறது. நீதிபதிகளின் வாயிலிருந்து, தனது ஆட்சிக்குக் குட்டு கிடைப்பதை பண்டிதர் விரும்பவில்லை —வெறுக்கிறுர்; உண்மையைக் காண பண்டிதர் பயப்படுகிறுர். அவர் ஏறியுள்ள அதிகார பீடம், அவரை இந்தப்பாடுபடுத்தி வைக்கிறது! எனவே, அதிகார வர்க்கத்தினராக மாறிவிட்டிருக்கின்ற அவர், அதிகார எக்காளம் இடுவதில் வியப்பு என்ன இருக்கிறது?

தாய் எட்டடி பாய்ந்தால் - குட்டி பதினறடி பாய்கிறது!

கடலூர் பனைவெல்ல ஆராய்ச்சிக் கூடமும் பம்பாய்க்குக் குடியேற்றப்படுகிறது

இந்தியப் பேரரசைப் பின்பற்றி அகிலஇந்திய கிராமத், தொழில் கழகத்தின் செயல்

கடலூர், ஜன. 24—

அகில இந்திய கதர், கிராமத் தொழில் போர்டு இங்கு நடத்துகிற மத்திய பனைவெல்லம் காய்ச்சுவதற்கான பயிற்சிப் பள்ளியும், ஆராய்ச்சிக் கழகமும் பம்பாய் மாநிலத்திலிருக்கும் தாணு மாவட்டத்தில் உள்ள தகானுசாலை எனும் ஊருக்கு வரும் பிப்ரவரி முதல் தேதி முதல் மாற்றி விடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

1949-ம் வருடம் ஆகஸ்டு மாதம் கடலூரில் இப்பள்ளி நிறுவப்பட்டது. அது துவங்கியதிலிருந்து இதுவரை, பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த சுமார் 400 பேர்கள், முன்னேறியுள்ள முறைப்படி பனைவெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியையும், சர்க்கரை மிட்டாய் தயாரிப்பதற்கான பயிற்சியையும் பெற்றுள்ளனர்.

எரிபொருள் தேவையைக் குறைத்தல், பனைவெல்லப் பாகு சேகரித்தல், பனைவெல்லத்தின் தரம் குன்ருது பாதுகாத்தல் போன்ற தொழிலை பாதிக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க இங்கிருந்த ஆராய்ச்சிக்கூடம் பயன்பட்டது.

இப்போது கடலூரிலிருந்து பம்பாயில் உள்ள தகானுசாலைக்கு இப்பயிற்சிப் பள்ளியை மாற்றுவதற்கு, புதிய இடம், கடலூரைக் காட்டிலும் தொழிலை அபிவிருத்தி செய்யப் பொருத்தமானதென்று கருதப்படுவதே காரணமாம்.

ஆவடியில் காங்கிரஸ் பிரதிநிதிகள்

45 சதவிகிதத்தினர்தான் கலந்து கொண்டனர்

ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பாதிக்குக் குறைவான காங்கிரஸ் பிரதிநிதிகளே கலந்து கொண்டார்களாம்.

ஜன. 21 வெள்ளியன்று நடைபெற்ற பகிரங்க மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய உபகண்ட முழுவதிலுமிருந்து 3,600 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; ஆனுல் மாநாட்டில் 1,600 பிரதிநிதிகள்தான் கலந்து கொண்டார்களாம்; இது, மொத்த எண்ணிக்கையில் 45 சதவிகிதமாகும்.

அகில இந்தியக் காங்கிரஸ் குழு கூட்டத்தில் 75 சதவிகிதத்தினர் கலந்து கொண்டார்களாம்; அக்குழுவிற்கு 22 மாநிலங்களிலிருந்து மொத்தம் 367 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

உத்திரப் பிரதேசத்திலிருந்து அ. இ. கா. குழுவிற்கு 74 பேர் உறுப்பினர்கள் உண்டு; அது போன்று, பீகாருக்கு 46 பேரும், தமிழ் நாட்டிற்கு 36 பேரும், மேற்கு வங்கத்திற்கு 32 பேரும் உறுப்பினர்கள்; இதர மாகாணங்களுக்கு 7 முதல் 20 வரை உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

* * *

ஆவடி காங்கிரசைபொட்டி சத்தியமூர்த்தி நகரில் அமைக்கப்பட்டிருந்த டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் நாள்தோறும் சராசரி 10,000 பேர் பேசினுர்களாம்.

ஜனவரி 20-ம் நாளன்று 12,000 பேர் பேசினுர்களாம். அதிக வேலை காரணமாக டெலிபோன் 'ஆபரேட்டர்களில்' இரண்டு பேருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதாம்.

குரங்குகளைக் கொடுமை படுத்தியவர்

ரூ. 120 அபராதம் விதிக்கப்பட்டார்

குரங்குகளைக் கொடுமைப்படுத்தியதற்காக பம்பாய் கம்பெனி ஒன்றின் சிப்பந்தியான எஸ். வர்மா என்பவருக்கு நீதிமன்றத்தில் ரூ. 120 அபராதம் விதிக்கப்பட்டதாம்.

குரங்குகளை சிறிய கூண்டுகளில் அவர் அடைத்து வைத்திருந்தாராம். கூண்டுகள் சிறியதாகவும், குரங்குகள் பெரியதாகவும் இருந்ததால் பல குரங்குகள் தொல்லைப்பட்டு அவற்றில் இரண்டு குரங்குகள் கூண்டிற்குள்ளேயே இறந்து கிடந்தனவாம்.

வழக்கு தொடுத்த எஸ். பி. சி. ஏ. நிலையத்தார் தலையிட்டு கூண்டுகளை அழித்த பின்னரும், ஒரு குரங்கு இறந்துவிட்டதாம்.

‘கல்வி முறை உண்மையில் பெருங் கேடுடையதா?’

‘தவருன அடிப்படையில் இருந்தே கண்டனங்கள் கிளம்புகின்றன’

‘எண்ணும் எழுத்தும் கற்பதே கல்வியின் அடிப்படை’

‘இந்திய மறுமலர்ச்சி இக்கல்வியிட்ட பிச்சையே’

‘தேசீய உணர்வும் இது தந்த காணிக்கையே’

நடைமுறை கல்வி குறித்து பேராசிரியர் உமாயூன் கபீர்

“இப்பொழுதுள்ள கல்வி முறைக்கு எழுந்துள்ள கண்டனங்கள் அனைத்தும், தவருன அடிப்படையிலிருந்து கிளம்பியுள்ளவைகளேயாகும். கல்விப் பண்பு குறைவாகக் காணப்படுகிறது என்பதற்காக அல்லாமல், முற்காலத்தில் அக்கல்வி பெற்றவர்களுக்கு வேலை கொடுத்துவந்தது போல், அது, இக்காலத்தில் கொடுக்க உத்தரவாதமளிக்க வில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டே, மேற்படி கண்டனங்கள் கிளம்பியுள்ளன.”

—இவ்வாறு, இந்தியப் பேரரசின் கல்வித் துறை துணை அமைச்சராக இருந்துவரும் பேராசிரியர் உமாயூன் கபீர் எழுதியுள்ளார்.

இந்தியப் பேரரசின் கல்வித் துறை மூன்று திங்களுக்கு ஒரு முறை வெளியிட்டு வரும் ‘கல்வி இதழி’ல், ‘இப்பொழுதுள்ள கல்வி முறை உண்மையிலேயே பெருந் தவறுடையதா?’ என்ற தலைப்பில் மேற்படி பேராசிரியர் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார். அக் கட்டுரையில்தான் கல்வி முறையைக் கண்டிப்பவர்களின் நோக்கையும், தன்மையையும் விளக்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் அக்கட்டுரையில் மேலும் கூறியுள்ளது வருமாறு:—

“தற்கால கல்வி முறையின் வெவ்வேறு பிரிவையும் தனித் தனியாகப் பாகுபாடு செய்து, அவைகள் மீது எழுந்துள்ள கண்டனங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அக்கண்டனங்கள் அனைத்தும் நியாயமானது அல்ல என ஒருவரால் வழக்காட முடியும்.

எழுதுவதையும், படிப்பதையும் தான் இந்தியாவின் தொடக்கக் கல்வி வலியுறுத்துகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை இரண்டும்தான் கல்வி முறை அனைத்தினுடையவும் அடிப்படை தேவை என்பதை ஒருவரும் மறுக்கார். சிறுர்களிடம் நற்பழக்கங்களைப் பயிற்றுவிக்கும் முனைப்பு தொடக்கக் கல்வி முறைக்கு இல்லை எனக் குறைபடுவதும் உண்மைதானு? அப்படி தோல்வி ஏற்பட்டிருக்குமானுல், ஆசிரியர்களின் தரக் குறைவும், கல்வி கற்கும் சிறுர்களின் அளவுக் கதிகமான எண்ணிக்கைப் பெருக்கமும், இடவசதி விளையாட்டு வெளி, பள்ளிச் சாதனங்கள், நூல்கள், மேலும் இது போன்ற வசதிகளின்மையும்தான் அதற்கான காரணமாகும்.

உயர்நிலைக் கல்விமுறை பற்றி எழும் கண்டனங்களோ வரை கடந்த ஒன்ருகும். இப்பொழுதும் உயர்நிலைக் கல்வி மன உணர்வையும் பெரிய அளவில் நூல்களைக் கற்றலையும் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது. கற்கும் இளைஞர்களின் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்றவகையில் வேறுபாடு கொண்டதாகக் கல்வி இருக்க வேண்டுமென்ற கோட்பாடு, அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒன்ருகும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இதுவரை நூற் கல்வியைப் பெறுவதுதான் கல்வி என ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. சிந்தனு சக்தியும், பகுத்தறியும் பண்பும்தான் மனிதனை மற்ற உயிர்களிலும் உயர்ந்தவன் என்ற நிலையை மனிதனுக்குக் கொடுத்திருப்பதால், இது, வியப்புக்குரியதாக இருக்கவில்லை தொடக்கக் கல்வியைப் போன்றே, உயர்நிலைக் கல்வியிலும், ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தல், மாணவர்களின் பெருக்கத்திற்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கூட்டல், இன்று இருக்கப் பெருத பலவித அடிப்படை சாதனங்களுக்கு ஏற்பாடு செய்தல் போன்றவற்றில் திருத்தங்களைச் செய்ய முனைய வேண்டும்.

உயர் படிப்பு, வெறும் குமாஸ்தாக்களை உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறது என்பது தெளிவான தவருகும். இக் கல்வி முறையின் மூல இலட்சியமே வேறு என்பதை அறிவதற்கு, இக்கல்வி, தனக்குத் தானே மன உணர்வு, சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும் ஒன்றே போதிய அத்தாட்சியாகும். உயர்ந்த கணிதம், மன உணர்வு, தத்துவ விசாரணை, அரசியல் உரையாடல் முதலியன ஒரு குமாஸ்தாவை உருவாக்குவதற்குத் துளியும் வேண்டப்படாதவைகளாகும்.

இந்தியர்களை மேல்நாட்டு விஞ்ஞான சிந்தனைகளுடன் இணைத்து, இந்திய மறுமலர்ச்சிக்குத் துணை செய்வதில் நடைமுறையில் உள்ள கல்வி முறை ஆற்றியுள்ள பெரும் பணியை மறுக்க முடியுமா?

ஐரோப்பிய அரசியல் சிந்தனை, வரலாறு ஆகியவற்றின் செல்வாக்கினடியாக நாம் பெற்ற சுதந்திர உணர்வும், இறுதியாக பெற்றுள்ள விடுதலையும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்ருக இருப்பதால், அதற்குத் தனி விளக்கம் தேவை இல்லை. இத்துடன், இந்திய ஒற்றுமை உணர்வு வளர்வதற்கும், இக்கல்வியில் எவ்வளவு குறைபாடுகள் இருந்த போதிலும், இக்கல்வி முறை பெரும் வலிவுடன் பணிபுரிந்திருக்கிறது என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.”

செய்திச் சுருள்

தின்னனூர் அரிசன முன்னேற்ற சங்கம்

8—1—55ல், மேற்படி சங்க உறுப்பினர் கூட்டம் தோழர் எம். பி. வி. இராகவன் தலைமையில் நடைபெற்றபோது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தோழர் கக்கன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக மகிழ்ச்சி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரை இளங்கோ மன்றம்

22—1—55-ல், மதுரை, பாண்டிய வேளாளர் தெரு, இளங்கோ மன்ற உறுப்பினர்களின் கூட்டம் தோழர் மு. சந்தானம் தலைமையில் நடைபெற்றபோது, மன்ற வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட பின், வருகிற மார்ச்சு திங்கள் 13-ந் தேதி, மன்ற 3-வது ஆண்டு விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

கண்டன உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

பழனி ‘விஜயகுமார் மில்ஸ்’ தொழிலாளர்கள் அனைவரும் (சர்வ கட்சியினர்) ஒன்றுபட்டு, மேற்படி மில் நிர்வாகிகள், அவசர காரியங்களையொட்டியும் கூட தொழிலாளர்களுக்குக் காஷுவல் லீவு அனுமதிக்க மறுத்ததை எதிர்த்தும், சர்க்கார் உத்தரவுப்படி பஞ்சப்படி கொடுக்கப்படாமலிருப்பதை ஆட்சேபித்தும், தொழிலாளர்கள் அனைவரும் ஒரு நாள் கண்டன உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடத்தினர். இப்பிரச்சினையில் தலையிட்டு விவகாரத்தைத் தீர்த்து வைப்பதாக ‘லேபர் ஆபீசர்’ உறுதி கூறியதின் பேரில் மேற்படி வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது. அன்று ஆலைக்கருகில் நடைபெற்ற தொழிலாளர்களின் ‘ஷிப்டு’ கூட்டத்தில், தொழிலாகளர்ளின் ஒற்றுமையைப் பாராட்டி, தோழர்கள் என். சிவகுருநாதன், கே. கருப்பச்சாமி, சி. இராமசாமி ஆகியோர் பேசினர்.

மூவேந்தர் கலைக்கூடம் அமைப்பு

24—1—55 இரவு 8 மணிக்கு, மதுரை மாவட்டம் க. புதுப்பட்டியில், தரகுமண்டியில், தோழர் பி. என். வி. பாண்டியர் தலைமையில், மூவேந்தர் கலைக்கூடம் அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: பி. என். வி. பாண்டியர்; துணைத்தலைவர்: ஆர். டி. இராசு; செயலாளர்: பி. ரெங்கசாமி; துணைச் செயலாளர்: எம். இரத்தினம்; பொருளாளர்: டி. எஸ். தூசியா பிள்ளை; அமைப்பாளர்: ஆர். கே. கே. சாமி. மற்றும் 13 பேர் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் நாடகத்திற்கு டி. எஸ். தூசியா பிள்ளை பயிற்சி ஆசிரியராகவும், பி. அம்மையப்பன் துணைப் பயிற்சி ஆசிரியராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அழகப்பா கல்லூரியில் தமிழ் விழா

காரைக்குடி அழகப்பா கல்லூரியில், 21, 22, 23—1—55 ஆகிய மூன்று நாட்களிலும் தமிழ் விழா நடைபெற்றது. முதல் நாளன்று தோழர் க. அன்பழகன் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினுர்.

இரண்டாம் நாளில் தோழர் திருமணிராசன் அவர்களது இசை அரங்கு நடைபெற்றது. இதை யொட்டி கல்லூரிப் பகுதி ஒன்றில் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ் விழாப் பொருட்காட்சி பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்பட்டது.

மூன்றுவது நாளில், தோழர் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ‘வாழும் நெறி’ என்னும் பொருள் குறித்து, தோழர் இரா. நெடுஞ்செழியன் நீண்டதொரு சொற்பொழிவாற்றினுர்.

பேராசிரியர் கார்மேகக் கோனர் தமிழ் பணிக்குப் பாராட்டு

18—1—55ல், மதுரை நகர் வடக்காடி வீதி, மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில், தோழர் பி. டி. இராசன் அவர்களால், திரு. ஆ. கார்மேகக் கோனருக்கு பசுமலை திரு. ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னுடை போர்த்திச் ‘செந்நாப் புலவர்’ என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது. பொன்னுடை போர்த்திப் பேசுகையில், தோழர் இராசன், திருவள்ளுவர் கழகத்தின் பணியினைப் பாராட்டியும், கார்மேகக் கோனர் அவர்கள் தமது சிறந்த புலமையினுல் அடைந்துள்ள பேற்றையும் எடுத்துக் கூறினர்.

பின்னர் திரு. சோமசுந்தர பாரதியார் பேசுகையில், மதுரை, புலவர் பெருமக்களைக் கொண்ட வரலாற்று உண்மையை விளக்கி சொற்பொழிவாற்றிய பின், அவரது அரும்பெரும் பொதுப் பணிகளைப் பாராட்டி தோழர்கள் பி. சீனிவாசன், கா. பாலுச்சாமி, அருணுசலம், ஜே. சவரிராயன், மா. இராசமாணிக்கனுர் ஆகியோர் பேசினர்.

திருவள்ளுவர் கழகச் சார்பில் அவருக்குத் தோழர் மீ. கந்தசாமி வாழ்த்துப்பாமாலை ஒன்று படித்தளித்தார். பல கழகங்கள், பொது நிலையங்கள் சார்பில் அவருக்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன.

மதுரை நெடுஞ்செழியன் மன்றம்

23—1—55 காலை 10 மணியளவில் மேற்படி மன்றச் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, பொங்கல் விழா வரவு—செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

13—2—55ல், மன்றச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்ட பின், தோழர் எம். எஸ். பெரியசாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பின்னர், 24-வது வட்டார தி. மு. கழகத்தின் சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டதாகவும், அதில் தோழர்கள் எம். அய்யாச்சாமி, கே. எஸ். இராசமான் ஆகியோர் பங்கெடுத்து கொடியேற்றிவைத்து சொற்பொழிவாற்றியதாகவும் வெளியான செய்தி தவருனதென்றும், அதிகாரபூர்வமாக இயங்கிவருகின்ற 24-வது வட்ட தி. மு. க. கிளை நெடுஞ்செழியன் மன்றம்தான் என்றும், மேற்கண்ட நிகழ்ச்சிக்கு யாருமே பங்கு எடுத்துக்கொள்ள அழைக்கப்படவில்லையென்றும், இது பொறுப்பற்ற சிலரின் செய்கை என்றும், இனிமேல் வட்டாரக் கிளைக் கழகத்தின் அனுமதி இல்லாமல் நடைபெறும் எந்தவித நிகழ்ச்சிக்கும் மேற்படி கிளைக் கழகம் பொறுப்பாகாது என்றும், கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடக்கும் இது போன்ற சிலர் மீது மதுரை நகர் தி. மு. கழகம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென கேட்டுக்கொண்டுதீர்மானம்ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மறைவு தினம்

22—1—55 இரவு 8 மணிக்கு சத்திரப்பட்டி தி. மு. கழகம், தி. மா. மு. கழகம், வள்ளுவர் நாடக மன்றம் ஆகியவை சார்பில், தி. மு. கழக இல்லத்தில், தோழர் கு. குருசாமி தலைமையில், தோழர் அ. இராமசாமி அவர்களது மறைவு தினம் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. கே. சாமி, எஸ். குருபாக்கியம், சிவ. அண்ணு, க. அண்ணுமலை, எஸ். இராசகோபாலன் ஆகியோர் திரு. அ. இராமசாமி அவர்கள் கழகத்திற்கும், நாடக மன்றத்திற்கும் பணியாற்றிய நற்றெண்டுகளைப் பாராட்டிப் பேசி அவர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர்.

புத்தூர் எலும்பு முறிவு சிகிச்சை நிலையம்

ரஷ்ய டாக்டர்கள் வருகை

சென்னை, ஜன. 21—

சென்னை வந்துள்ள ரஷ்ய மருத்துவர்களான ஒப்ரசோவும், ஸ்கோர்னியர் கோவா (ரஷ்ய பெண் டாக்டர்)வும் இன்று, சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள ‘புத்தூர் எலும்பு முறிவு சிகிச்சை’ நிலையத்திற்கு வருகை தந்தனர். இவர்களுடன் இந்திய அரசாங்க சுகாதார இலாகா விசேட அதிகாரி டாக்டர் கே. சி. கே. இ. ராஜாவும் வந்திருந்தார். சிகிச்சை நிலைய எலும்பு முறிவு வைத்திய நிபுணர் திரு. ஆர். செங்கல்ராஜு அவர்கள், டாக்டர்களை வரவேற்று நிலையத்தின் பல பாகங்களைக் காண்பித்து, ஏராளமான சிகிச்சையாளர்களுக்கு டாக்டர்கள் முன்னிலையில் சிகிச்சை செய்து பச்சிலை மூலிகை மூலம் குணப்படுத்தும் விதத்தையும் விளக்கிக் கூறினுர். மூலிகையினுல் செய்யப்படும் சிகிச்சை முறைகளையும், அந்த சிகிச்சையினுதவியால் வியாதிகள் விரைவில் குணப்படுவதையும் கண்டு ரஷ்ய டாக்டர்கள் ஆச்சரியப்பட்டனர். (ச.—தி.)

மதுரை—மணிநகரம் தியாகராயர் படிப்பகம்

23—1—55 காலை 10½ மணிக்கு தோழர் பி. அறிவழகன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் படிப்பகத் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்ட பின், படிப்பக நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: இரா. சந்திரன்; துணைச் செயலாளர்: பி. அறிவழகன்; பொருளாளர்: எம். ராமசாமி; விளம்பர உறுப்பினர்: திராவிடச் செல்வன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 11 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மறுமலர்ச்சி மன்றம் அமைப்பு

23-1-55 பிற்பகல் 3 மணிக்கு, திருச்சி 15-ம் வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் சு. அருணன் தலைமையில், மறுமலர்ச்சி மன்றம் அமைக்கப்பட்டது. தோழர் எஸ். நெடுமாறன் மன்றப் பணி குறித்து பேசினுர். பின்னர் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: எம். கரிகாலன்; துணைச்செயலாளர்: கேசவன்; பொருளாளர்: வை. ராமசாமி. மன்றம், தி. மு. கழக விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

பிறப்பு

சென்னை — திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகச் செயலாளர் தோழர் சண்பகவேல் அவர்களது துணைவியார் 1-1-55ல், ஓர் பெண் மகவுக்குத் தாயானுர். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது —வரப்பெற்ேறும்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

வடசென்னை 4-வது வட்ட தி. மு. கழகத் தோழரும் ‘சற்குண கேப்’ உரிமையாளருமான தோழர் எஸ். பி. பி. சாமி அவர்களின் மகள் தோழியர் ஜெகஜோதிமணி—நாகராசன் ஓர் பெண் மகவுக்குத் தாயானுர். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது-வரப்பெற்ேறும்-நன்றி—பொறுப்பாளர்.

* * *

14—1—55 மாலை 3 மணிக்கு தாத்தையங்கார்பேட்டை எம். எஸ். என். இராசன் அவர்களது வாழ்க்கைத் துணைவியார் தோழியர் சகுந்தலா ஓர் பெண் மகவுக்குத் தாயானுர். அம்மகவுக்கு ‘தாமரைச் செல்வி’ என பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது- வரப்பெற்ேறும்-நன்றி—பொறுப்பாளர்.

தேர்தல் கலவரம்

16 பேர் காயமுற்றனர்

சீராளா, ஜன. 26—

ஆந்திராவில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலையொட்டி காங்கிரஸ்காரர்களுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே கலவரம் நிகழ்ந்திருக்கிறது.

சீராளா அருகேயுள்ள எப்ருபாலத்தில் 14 காங்கிரசாருக்கும், 2 கம்யூனிஸ்டுகளுக்கும் தேர்தல் அடிதடியில் காயமேற்பட்டதாம்.

120 மாடுகள் கொண்ட ஊர்வலமொன்றை கம்யூனிஸ்டுகள் நடத்தினார்களாம்; அந்த ஊர்வலம் சீராளாவுக்குத் திரும்பும்போது கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக காங்கிரசார் கோஷமிட்டனராம்! கற்கள் வீசப்பட்டதாம்; இதனால் கோபம் கொண்ட கம்யூனிஸ்டுகள், தடி கொண்டு காங்கிரசாரைத் தாக்கினார்களாம்.

'காங்கிரஸ் ஒழிக; பிரகட கோட்டையா ஒழிக,' என்று கம்யூனிஸ்டுகள் கோஷமிட்டதாகச் சொல்லப்படுகிறது. கம்யூனிஸ்டுகள் எப்ருபாலம் பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டிற்குச் சென்று அங்கிருந்தவர்களைத்தாக்கி இரண்டு தறிகளை உடைத்தனராம்.

சீராளாவிலிருந்து போலீசார் சென்று அமைதியை நிலை நாட்டினார்களாம்.

போலீசார் இ. பி. கோ. 147, 323 பிரிவுகளின்படி வழக்குகளைத் தொடர்ந்திருக்கின்றனர் என்று தெரிகிறது. காயமடைந்தோரில் நான்கு பேர் சீராளா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

★

குண்டூரில் 13 பேருக்குக் காயம்

குண்டூர், ஜன. 27—

இந்நகரில் நேற்று காங்கிரசாருக்கும் கம்யூனிஸ்டுகளுக்குமிடையே நடைபெற்ற கலவரத்தில் 13 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

இந்த நகருக்கு, தேபரின் வருகையை முன்னிட்டு காங்கிரஸ் தோழர்கள் லாரிகளில் சென்று மக்களை கூட்டத்திற்கு வருமாறு அழைத்தார்களாம். அவர்களில் சிலர் கம்யூனிச எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியிருக்கிறார்கள்.

இதன் விளைவாக கம்யூனிஸ்டுகளுக்கும் காங்கிரசாருக்குமிடையே கலவரம் ஏற்பட்டதாம். பெண்களும் இக்கலவரத்தில் கலந்துகொண்டனர் என்றும், அவர்கள் எதிரிகளின் மீது மிளகாய்ப்பொடியைத் தூவினார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

காயமடைந்தவர்களில் 7 பேர் காங்கிரசார் என்றும், மற்றவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றும் தெரிகிறது.

நிலமற்ற ஏழைகளுக்கு 'காலனி'

திரு-கொச்சியில் திறக்கப்பட்டது

கோட்டயம், ஜன. 26—

திரு-கொச்சி மாநிலத்தில், நிலமில்லாதோருக்கான 50,000 ஏகர் நிலப்பரப்பில் 'காலனி' ஒன்றை, சென்ற வாரத்தில் தொழிலாளர் மந்திரி பி. கே. குஞ்சு திறந்துவைத்திருக்கிறார்.

பட்டம் தாணுபிள்ளையின் பெயருடைய அக்காலனியில், 10 பேர்கள் உடனடியாகக் குடியேறி வாழ்க்கை நடத்த ஆரம்பித்துவிட்டனராம்.

கல்லார் காடுகளில்—யானைகள் அதிகம் வசிக்கின்றன என்று கருதப்படும் காடுகளில் அந்த 'பட்டம் காலனி' அமைந்துள்ளது.

இந்தப் பகுதி, தாய்த் தமிழகத்துடன் இணையவேண்டுமென்று திரு-தமிழர்கள் விரும்புகின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சுமார் 3,000 குடும்பங்கள் குடியேறி வாழவிருக்கிற இந்தக் காலனிக்குப் பொருளாதார உதவி செய்யவும் சர்க்கார் முன்வந்துள்ளதாம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 ஏக்கர் நிலமிருக்கிறது.

பட்டம் பதவிக்கு புதிய குத்தகை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அனுமதி கொடுப்பதற்கு முன்னதாகவே, அதற்குரிய விவாதத் தேதியை நிகழ்ச்சி நிரலில் சட்டசபை தலைவர் குறிப்பிட்டிருப்பது முறைகேடாகும் என சட்டநாதக் கரையாளர் கூறினார்.

இதுபற்றி பலமான வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன.

காங்கிரஸ் தலைவர் பனம்பள்ளி கோவிந்தமேனன் பேசும்பொழுது: 'நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர அனுமதிக்கப்பட்ட 10 தினங்களுக்குள், அத்தீர்மானத்தை விவாதிப்பதற்கென ஒரு நாளை குறிப்பிடும் அதிகாரம் தலைவருக்கு இருக்கிறது. அனுமதி தரப்பட்டதும் தீர்மானத்தை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை தலைவர் திருத்தவேண்டும். அப்பொழுதுதான், சிறைச்சாலையில் உள்ள சட்டசபை உறுப்பினர்களும் ஜாமீனில் வெளிவந்து விவாதத்தில் கலந்துகொள்ளுவது சாத்தியமாகக்கூடும். எனவே பிப்ரவரி 5-ந் தேதிக்கு பிரஸ்தாபத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள தலைவர் அனுமதிக்க வேண்டும்' எனக் கோரினார்.

"12 உறுப்பினர்களைக்கொண்ட எதிர்க் கட்சியின் தலைவராக இருக்கும் ஒருவர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர சபை அனுமதியைக் கோரி இருக்கிறார் ஆனால் அவர்களில் எழுவர் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்னும் நான்கைந்து தினத்தில் அவர்கள் ஜாமீனில் வரக்கூடும் என்பதற்கான அறிகுறி இருக்கிறது" என கோவிந்தமேனன் கூறியதை இடைமறித்து: முதல் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை "அதற்கான இரகசிய ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா? அவர்கள் ஜாமீனில் விடுதலை யடைவார்கள் என்பது உங்களுக்கு எப்படி தெரியும்?" எனக் கேட்டார்

நீதி மன்ற விவகாரத்தில் குறுக்கிடுவதாகும் இவ்வாக்குவாதம் என ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினர் ஒரே காலத்தில் பல உறுப்பினர்கள்.

கோவிந்தமேனன் இறுதியாக "தீர்மானத்தின் மீது நடைபெற வேண்டிய விவாதத்தை தள்ளிப்போட வேண்டுமெனும் தங்கள் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்படவில்லையானால், தீர்மானத்தை ஆதரிக்கின்றவர்கள் என்ற முறையில், தீர்மானம் கொண்டுவருபவரிடம் அதை வலியுறுத்த வேண்டாமென நாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. 'நேர்மையற்ற சூழ்நிலை' என நாங்கள் கருதுகிற இந்நிலையில் குறிப்பிட்ட விவாதம் நடைபெறுவதற்கும் இடமிருக்காது" எனக் குறிப்பிட்டார்.

விவாதத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென கம்யூனிஸ்டு கட்சியும், புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியும் கோரியது.

புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியின் சார்பாக பேசிய, டி. கே. திவாகரன் 'தி. கொ. த. கா. கட்சியைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் சிறையில் இருப்பது புதிதல்ல. சட்டமாக்கப்பட வேண்டிய பல முக்கிய மசோதாக்கள் காத்துக்கொண்டு இருக்கின்றன. சூழ்நிலையினால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் காரணமாக அதிகாரம் பெற்றுள்ள சிறுபான்மை கட்சியையும் கூடிய விரைவில் வெளியேற்ற வேண்டியதும் அவசியமாகிறது. எனவே, தீர்மானத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரக் கோருகிறேன்' என்றார்.

29-ந் தேதி தீர்மானத்தை விவாதிப்பது என நிச்சயிக்கப்பட்டது.

பொங்கல்விழாப் பொதுக் கூட்டங்கள்

ஜன. 29, 30-ந் தேதிகளில் திருவத்திபுரம் தி. மு. கழகச் சார்பில், திருவத்திபுரம் தோ. மு. ஆ. ரைஸ் மில் திடலில் பொங்கல் விழாப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

29—1—55 மாலை **6** மணிக்கு, தோழர் டி. எம். ரங்கசாமி தலைமையில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசுவர்.

30—1—55 மாலை **6** மணிக்கு, தோழர் பி. கே. இராமசாமி தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

* * *

30—1—55 மாலை 6 மணிக்கு, சிதம்பரம் சின்ன செட்டித் தெருவில், சிதம்பரம் திராவிட இளைஞர் முன்னேற்ற படிப்பகச் சார்பில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் தோழர் மு. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் **கண்ணதாசன்,** அரசு ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

தூத்துக்குடி-
சந்தணமாரியம்மன் கோவில் பக்கம்

30—1—55 மாலை **6** மணிக்கு
தலைவர்: இரா. சு. தங்கப்பழம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். நடராசன்

★

திருச்சி
பெரியநடை வீதி-கிளை தி. மு. கழக
2-ம் ஆண்டு விழா
தேவர் மன்றத்தில்

30—1—55 காலை **9** மணிக்கு
தலைவர்: பி. பாண்டுரெங்கன்
பேசுவோர்:
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி
இளமுருகு பொற்செல்வி
ஏ. பி. தர்மலிங்கம்
எஸ். நெடுமாறன்
எம். எஸ். மணி

* * *

பொங்கல் விழாப் பொதுக் கூட்டங்கள்

★

காஞ்சிபுரம்
கெங்கைகொண்டான் மண்டபம் அருகில்

30—1—55 மாலை **6** மணிக்கு
தலைவர்: எஸ். ஜி. பெருமாள்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
சி. வி. எம். அண்ணாமலை

★

வேலப்பாடி

30—1—55 மாலை **6** மணிக்கு
பேசுவோர்:
க. அன்பழகன்
வே. அ. இளஞ்செழியன்
கூத்தரசு

★

பழநி
தேரடித் திடலில்

30—1—55 மாலை **6½** மணிக்கு
தலைவர்: டி. யூ. இராமசாமி
பேசுபவர்:
எம். எஸ். ராமசாமி

★

குன்னத்தூர்
தேர்முட்டித் திடலில்

30—1—55 மாலை **7** மணிக்கு
தலைவர்: கே. என். நடராசன்
பேசுவோர்:
க. அறிவழகன்
சிற்றுளி சுப்பிரமணியம்
கு. க. அய்யாவு

இடதுசாரி கட்சிகளின் புதிய கூட்டணி

பம்பாயில் அகில இந்திய எதிர்க் கட்சி உருவாகிறது

பம்பாய், ஜன. 27—

கம்யூனிஸ்டு கட்சி, பிரஜா—சோஷலிஸ்டு கட்சி இவைகளன்றி இதர இடதுசாரி கட்சிகள் பல ஒன்று சேர்ந்து புதிய கட்சியாக உருவாகும் என்று தெரிகிறது. இதற்கான முயற்சி ஒன்று இந்த வார இறுதியில் பம்பாயில் நடைபெற இருக்கிறது.

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, புரட்சி சோஷலிஸ்டு கட்சி, போல்ஷ்விக் கட்சி, மஜ்தூர் கம்யூனிஸ்டு கட்சி, முற்போக்கு கம்யூனிஸ்டு கட்சி, சோஷலிஸ்டு கட்சி, தென் இந்திய சோஷலிஸ்டு முன்னணி, கம்யூனிஸ்டு லீக், இந்தியத் தொழிற்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூடிப்பேசஇருங்கின்றனர்.

ஐதராபாத் சோஷலிஸ்டு தொழிலாளர் நிலையம், டாக்டர் என். எம். ஜெயசூர்யாவின் தலைமையில் இயங்கும் ஜனநாயக முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

டாக்டர் ஜெயசூர்யா, ஜி. எம். ஷராப், சுமேந்திர தத் ஆகியவர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார்களாம்.

விவசாயிகள்-தொழிலாளர் கட்சியின் செயலாளர் ஆர். கே. கதில்கார் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் இந்தக் கூட்டத்திற்கு இரண்டு பார்வையாளர்களை அனுப்புமென்றும், இந்தக் கூட்டத்திற்கு 'மார்கிஸ்ட் யூனிட்டி மாநாடு' என்று பெயரிடப்படுமென்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள பல மார்க்சீய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தான் பேச்சுவார்த்தைகள் நடத்துவதாக கதில்கார் கூறியிருக்கிறார். இடதுசாரிகளிடையே கொள்கை, கட்சி அமைப்பு இவைகளில் ஒற்றுமையிருப்பது அந்தப் பேச்சு வார்த்தையின்போது தெரிந்ததாம்.

இப்புதிய கட்சியின் கொள்கை பற்றிச் சொல்லும்போது, அவர்கள் காமின்பாரத்துடன் தொடர்பு கொள்ளமாட்டார்கள் என்றும், கம்யூனிச எதிர்ப்பு சக்திகளுடனும் சேரமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்புதிய கட்சி, சோவியத் யூனியன், சீனா போன்ற மக்கள் குடியரசு நாடுகளுடன் நட்புறவு எண்ணம் கொண்டிருக்குமாம். இந்தியாவில் சோஷலிசப் புரட்சி ஏற்படுத்த மார்க்சீயத்தின் அடிப்படையில் அக்கட்சி உழைக்குமாம்.

கட்சி அமைப்பு ஜனநாயகப் பண்புகளைக் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் இப்புதிய கட்சி, கம்யூனிஸ்டு கட்சியுடன் ஒத்துழைக்குமாம்.

"இடதுசாரிகளிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன்தான் இப்படி நாங்கள் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்போம்," என்று கதில்கார்கூறினார்.

"இந்தியாவில் காங்கிரசின்மீது நம்பிக்கை இழந்துவிட்டவர்கள் ஏராளமாக உள்ளனர்; அவர்களில் பெரும்பாலானோர் கம்யூனிஸ்டு கட்சியில் சேரத் தயாராக இல்லை; அவர்கள் தங்களை சோஷலிசப் பாதை நோக்கி அழைத்துச் செல்ல ஒரு கட்சி தேவை என எதிர்பார்க்கிறார்கள்; ஆகவே தான், இந்தியாவுக்கு ஏற்றது போல், புதிய மார்க்சீயக் கட்சி ஒன்று அமைக்கப்படுகிறது" என்று கதில்கார் கூறினார்.

"புதிதாகச் சுதந்திரம் அடைந்துள்ள நாட்டிற்குக் கம்யூனிஸ்டு கட்சி எதும் செய்ய இயலாது; பி.-சோ. கட்சியோ பெரும் நெருக்கடிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது; கொள்கையில் ஏற்பட்ட குழப்பமே அதற்குக் காரணம்; மேலும், பி.-சோ. கட்சி மக்களின் நன்மதிப்பை பெறுவதை விட்டு பதவியைத் தேடிச் செல்கிறது; ஆகவே இதுபோன்ற நிலையில் புதிய கட்சி ஒன்று அவசியமாகிறது," என்று கதில்கார் மேலும்குறிப்பிட்டார்

முத்தமிழ்க் கலை விழா

ஜன. 28, 29, 30, 31-ந் தேதிகளில், சென்னை சட்டக் கல்லூரித் தமிழ் மன்றச் சார்பில், மேற்படி கல்லூரியில், முத்தமிழ்க் கலை விழா நடைபெறும். இயல், இசை, நாடகம், கட்டுரைப் போட்டிகள் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

30—1—55 மாலை 5½ மணிக்கு: 'தமிழகமும் கடல் கடந்த தமிழரும்' என்னும் பொருள் பற்றி பெரியார் ஈ. வெ. ரா. பேருரையாற்றுவார்.

திருக்குறள் கழக ஆண்டு விழா

30—1—55 அன்று, செவ்வாய்ப்பேட்டை திரு. மீனாட்சியம்மன் ஆலயத்தில், மேற்படி விழா காலையிலும் மாலையிலுமாக நடைபெறும். தோழர்கள் க. நடேச உடையார், சி. இலக்குவனார், க. வச்சிரவேல் முதலியார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

29—1—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் இரா. வேங்கடன் தலைமையில் 'சிந்தனை' என்னும் பொருள் பற்றி நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

முன்னணிக் கழகம்

29—1—55 மாலை 5¼ மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி, எண் 9, சுப்பராயச் செட்டி தெருவில், தோழர் நன்னன் தலைமையில் 'எதிர்கால இலக்கியம்' என்னும் பொருள் பற்றி தோழியர் கனக சுந்தரி பேசுவார்.

மன்னார்குடி சிற்றுண்டிச்சாலை ஊழியர்கட்கு

30—1—55 இரவு 10 மணிக்கு, மன்னார்குடி, கீழ ராஜ வீதியிலுள்ள காய்கறி மார்க்கெட்டில், சிற்றுண்டிச்சாலை தொழிலாளர்கள் சங்க அமைப்புக்கூட்டம் நடைபெறும்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜன. 29. ஆரணி
30: வேலப்பாடி (வேலூர்)
31: வேலூர்

20,000 'வாகன்'கள் இறக்குமதி

சென்னை, ஜன. 27—

சாமான் போக்குவரத்துக்குத் தேவைப்படும் வாகன்களின் பற்றாக் குறையைத் தவிர்க்க 20,000 'வாகன்'களை இறக்குமதி செய்ய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு அதிகமான வசதிகள் செய்யவும், ரயில் கட்டணங்களில் குறிப்பிட்ட சில மாறுதல்களைச் செய்யவும் சர்க்கார் உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.,